தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 25, திருவள்ளுவர் ஆண்டு—2053

2022 ஏப்ரல் 8, வெள்ளிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்
தீப்பிணி தீண்டல் அரிது."

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசியென்னும் கொடிய நோய் அணுகுவதில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 74, பின்னர் எடுத்துக் கொள்ளப்படும். வினா வரிசை எண் 75, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

75—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***9728—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

பூந்தமல்லி சட்டமன்றத் தொகுதி அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 33 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இதைத் தவிர 38 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், இரண்டு அரசு உதவி பெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும், 19 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவியர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தொகுதியில் புதியதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரை உண்மையானது. ஆனால் அவர் கூறுகிற இரண்டு கல்லூரிகளும் திருத்தணியில் ஒன்றும், பொன்னேரியில் ஒன்றுமாக அமையப் பெற்றிருக்கிறது. பூந்தமல்லியில் இருந்து கல்லூரிக்குப்போய் வருவதற்கு நான்கு மணி நேரம் ஆகும். திருவள்ளூர் மாவட்டத்தில் பத்து தொகுதிகள் இருக்கின்றன. அந்தப் பத்து தொகுதிகளிலும் மூன்று கலைக் கல்லூரிகள் இருக்கின்றன. ஆலந்தூரில் இருந்து காஞ்சிபுரம் வரை பெங்களூரு நெடுஞ்சாலையை ஒட்டியிருக்கக்கூடிய பகுதியில் எந்த ஒரு கலைக் கல்லூரியோ, அறிவியல் கல்லூரியோ கிடையாது. எனவே, பூந்தமல்லி என்பது சென்னை புறநகரத்தில் உள்ளது. எல்லோரும் சென்னையிலேதான் வந்து படிப்பதால் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. பூந்தமல்லி தொகுதியில் அரசு கல்லூரி இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல சுயநிதி கல்லூரிகள் இருந்தாலும், அதில் கட்டணம் கட்டி மாணவர்களைப் படிக்க வைக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, இல்லை என்று சொல்லாத மனம் படைத்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 'கல்லாமையை இல்லாமையாக' ஆக்குவதற்காக பூந்தமல்லியிலே ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியைக் கட்டித் தந்தால், மிகப் பொருத்தமாக*

2022 ஏப்ரல் 8]

இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மூன்று கல்லூரிகள் இருக்கின்ற தொகுதியில் இன்னும் ஒன்று வேண்டுமென்று கேட்கிறார். ஒரு கல்லூரிகூட இல்லாத தொகுதிகள் இருக்கின்றன என்று இங்கே இருக்கிற பல்வேறு தொகுதிகளின் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களிடம் மனுக்களை அளித்திருக்கிறார்கள். ஒரு கல்லூரி கூட இல்லை என்று சொல்லி நிறைய உறுப்பினர்கள் மனு கொடுத்திருக்கிறார்கள். ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதையெல்லாம் எடுத்துச் சொல்லி அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். குறிப்பாக, இங்கே இருக்கிற அரசுக் கல்லூரிகளில் உள்ள மொத்த இடங்கள் 3,697. அதில் 3,368 இடங்கள்தான் நிரப்பப்பட்டிருக்கின்றன, 329 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதேபோல அரசு உதவி பெறும் கல்லூரிகளில் 470 இடங்களில் 436 இடங்கள்தான் நிரம்பியிருக்கின்றன. 34 இடங்கள் காலியாக இருக்கின்றன. அதனால் அங்கே இருக்கிற கல்லூரிகளில், இடங்கள் நிரப்பப்படாத நிலையை உணர்ந்துதான் சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததன் அடிப்படையில், அரசுக் கல்லூரிகளில் சேருகின்ற மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்பதோடு, முதலில் இருந்த மாணவர்களின் எண்ணிக்கையைவிட 25 சதவிகிதம் கூடுதலாகக் கொடுத்து நாங்கள் அவர்களை சேர்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கே இருக்கிற கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். 4 கிலோ மீட்டர், 5 கிலோ மீட்டர் சுற்றளவில் கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்கிறார். 25 கிலோ மீட்டர், 40 கிலோ மீட்டர் சென்று கல்லூரியில் படிக்கின்ற நிலைமையெல்லாம் இருக்கின்றது. அவற்றையெல்லாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறோம். நிச்சயமாக வருங்காலத்திலே படிப்படியாக அங்கு கல்லூரிகளை உருவாக்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.*

[*2022 ஏப்ரல் 8*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.*

முற்பகல் 10–05

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிக்குச் சென்று படிக்க வேண்டுமென்றால், திருத்தணி மற்றும் பொன்னேரிக்கு 80 கிலோ மீட்டர் தூரம் செல்லவேண்டும். எனவேதான், பூந்தமல்லி நெடுஞ்சாலை, பெங்களூரு நெடுஞ்சாலையில் ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்கிறேன். மாணவிகள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகை வழங்குகிற அற்புதமான திட்டத்தை நீங்கள் சமூக நீதி காப்பதற்காக அறிமுகம் செய்திருக்கிறீர்கள். எனவே, அந்த வகையிலே உயர் கல்வி தமிழ்நாட்டிலே உயர வேண்டும் என்ற அக்கறையோடு ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டும். சுயநிதிக் கல்லூரிகள் இருக்கின்றன; ஆனால், அங்கே கட்டணம் கட்ட முடியாது. பொறியியல் கல்லூரி இருக்கிறது. ஆனால், பொறியியல் படிப்பதற்கு அங்கு ஆட்கள் இல்லை. ஆகையால், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளிலே இன்றைக்கு அதிகமான மாணவர்கள் சேர்வதற்கு ஆசைப்படுகிறார்கள். பூந்தமல்லியிலிருந்து காஞ்சிபுரம் வரை உள்ள நெடுஞ்சாலையில் கல்லூரியே கிடையாது. அந்தச் சாலையில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும் என்றுதான் கேட்கிறேன்.* Cycle–*ல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். கேள்வியை மட்டும் கேளுங்கள்.*

திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* cycle–*ல் சென்று சமூக நீதி காப்பதற்காக தந்தை பெரியார் கொள்கையில் பல பெண்கள் படிப்பதற்காக தன்னுடைய ஆரம்ப கால பொது வாழ்க்கையை தொடங்கியவர் மாண்புமிகு அமைச்சர் அவர்கள். பூந்தமல்லி மிகவும் பின்தங்கிய தொகுதி; பணக்காரர்கள் இருக்கக்கூடிய தொகுதியாகக்கூட இருக்கலாம்; ஆனால், இங்கேயிருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள் ஏழ்மையானவர்கள்; கூலித் தொழிலாளர்கள்;* watchman–*களாக வேலை செய்கின்றவர்கள். அவர்களுடைய பிள்ளைகள் படிக்க வேண்டுமென்பதற்காகத்தான் சமூக நீதி பரப்பிய மாண்புமிகு*

2022 ஏப்ரல் 8]

அமைச்சர் அண்ணன் அவர்களிடம் தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்பதிலே எந்தத் தவறும் இல்லை. எல்லோருக்கும் ஆங்காங்கே அதிக கல்லூரிகள் வர வேண்டுமென்ற கோரிக்கை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் நான், இருக்கின்ற சூழ்நிலைகளை எடுத்துச்சொல்லி இருக்கிறேன். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்கூட அவருடைய தொகுதிக்கு ஓர் அரசு கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார். சென்ற ஆண்டே கோரிக்கை வைத்தார். இங்கே இருக்கின்ற பல பேர் அந்தக் கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். ஆகவே அடிப்படைத் தேவைகள், முதலில் எங்கு இல்லையோ அதனை நிரப்பிவிட்டு, மற்ற இடங்களுக்கு கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பிறகு ஏற்பாடு செய்வார்கள். உயர் கல்வித் துறையிலே தமிழகத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்று முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் காலத்திலே மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று அறிவிக்கப்பட்டது; அதனைத் துவக்கி வைத்தவரும் தலைவர் கலைஞர் அவர்கள்தான். அதுபோன்று, இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதுகுறித்து யோசித்துக் கொண்டிருக்கிறார். அவையெல்லாம் ஆலோசனை செய்யப்பட்டு கல்லூரி இல்லாத தொகுதிகளுக்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படும். மற்ற இடங்களுக்கு தொடர்ந்து வருகிறபோது ஏற்பாடுகளைச் செய்வோம் என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *என் தொகுதிக்கு ஞாபகப்படுத்தியதற்கு நன்றி. வள்ளியூரில் மகளிர் கலைக் கல்லூரியை எப்படியும் நீங்கள் வருகின்ற மானியக் கோரிக்கையில் அறிவிப்பீர்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன் அவர்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாநகரில் சேலம் சௌடேஸ்வரி கல்லூரி 1976 ஆம் ஆண்டு முதல் அரசு உதவியுடன் துவக்கப்பட்டு, தனியாரால்*

ஆண்கள் கல்லூரியாக நடத்தப்பட்டு வந்தது. பின்னர் இருபாலர் படிக்கும் கல்லூரியாக மாற்றப்பட்டது. இந்த ஆண்டு திடீரென்று பெண்கள் மட்டுமே கல்லூரியில் சேர்க்கப்படுவார்கள் என்ற அறிவிப்பு வெளியாகியிருக்கிறது. ஏற்கெனவே சேலம் மாநகரில் பெண்களுக்காக, அரசு மகளிர் கல்லூரி, சாரதா கல்லூரி, ஜெயராணி மகளிர் கல்லூரி போன்ற 3 கல்லூரிகள் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால், ஆண்களுக்காக சேலம் அரசு கல்லூரி, சேலம்–7. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் துணைக் கேள்வி கேட்கிறீர்கள், சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால் ஆண்களுக்காக சேலம் அரசுக் கல்லூரி, சேலம்–7–ல் ஒன்று மட்டும்தான் இருக்கிறது. அந்தப் பகுதியிலே படிக்க விரும்பும் ஆண்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கும் என்ற காரணத்தால், அந்த உத்தரவினை இரத்து செய்ய முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற ஆண்கள் மற்றும் பெண்கள் படிக்கக்கூடிய* co–education institution–*ஐ மாற்றி, சில பேர் பெண்களுக்காக மட்டும் கேட்கிறார்கள். இப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற அறிவிப்பின்படி அரசுப் பள்ளிகளில் படிக்கின்ற பெண்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படும்; அதுமட்டுமல்ல, அவர்களது விடுதிச் செலவும் அரசால் ஏற்றுக்கொள்ளப்படும், பயணச் செலவும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நேற்றுகூட 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பற்றி கூறும்போது சொல்லியிருக்கிறார். ஆகவே, மாணவிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் செயல்பட்டிருக்கலாம். நீங்கள் சொல்வதைப்போல அங்கே தனியார் கல்லூரிகளிலோ, மற்ற கல்லூரிகளிலோ* co–education *இல்லாமல் இருக்குமானால் அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத்*

2022 ஏப்ரல் 8]

தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள்.*

திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று பொற்கால ஆட்சி நடைபெற்றுக்கொண்டிருந்த நேரத்திலே நானும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் உறுப்பினராக இருக்கின்ற வாய்ப்பை பெற்றிருந்தேன். அப்போது குளித்தலைக்கு ஓர் அரசு கலைக் கல்லூரி வேண்டுமென்ற வேண்டுகோளையேற்று, அப்போதிருந்த மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 2007 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 3 ஆம் தேதியன்று இந்தப் பேரவையில் குளித்தலைக்கு அரசு கலைக் கல்லூரி வழங்கப்படும் என்று சொல்லி, அந்தக் கல்லூரிக்கு டாக்டர் கலைஞர் பொன் விழா அரசு கலைக் கல்லூரி என்ற பெயரையும் சூட்டி அறிவித்தார்கள். அதன் பிறகு அந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்பட்டு, 12–12–2010 அன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அப்போது துணை முதல்வராக இருந்தபோது அங்கே வருகை தந்து, அவர்களுடைய திருக்கரங்களால் அந்தக் கல்லூரியைத் திறந்து வைத்தார்கள். அதன் பிறகு ஆட்சி மாற்றத்தில் அந்தக் கல்லூரிக்கு கலைஞர் பெயரை கடந்த ஆட்சியாளர்கள் எடுத்துவிட்டார்கள். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரை முதன்முதலாக சட்டமன்றப் பேரவைக்கு அனுப்பிய பெருமைபெற்ற அந்தத் தொகுதியில் அவருடைய பெயர் அந்தக் கல்லூரிக்கு மீண்டும் சூட்டப்படுமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிற கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லையென்றாலும், அவருக்கு அதற்கான ஒரு விளக்கத்தைக் கொடுக்க வேண்டும். முதலில், அ.தி.மு.க.–வினுடைய சட்டமன்ற உறுப்பினர்*

அவர்கள் குறிப்பிட்டதுபோல, சௌடேஸ்வரி கல்லூரி மாற்றி அமைக்கப்பட்டதே அவர்களுடைய ஆட்சியில்தான். அதனை அவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அதனால், அதையும் நாங்கள் பரிசீலிப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

76—

புறவழிச் சாலை

***480—திரு. ப. அப்துல் சமது:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மணப்பாறை தொகுதி, மணப்பாறையில் புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இப்பணிக்கான விரிவான திட்ட அறிக்கை, அதாவது D.P.R. *ரூ.40.00 இலட்சத்திற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. அப்துல் சமது அவர்கள்.*

திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. மணப்பாறை நகரத்தினுடைய மையப் பகுதியிலே மாரியம்மன் கோயில் இருக்கிறது. அதன் அருகிலேயே ஜும்மா பெரிய பள்ளிவாசல், அதற்கு அருகிலேயே புனித லூர்து மாதா ஆலயம் என அமையப்பெற்று, மத நல்லிணக்க நகரமாக மணப்பாறை நகரம் திகழ்கிறது. அந்த நகரத்திற்குள் வரக்கூடிய வாகனங்கள் அதிகமான போக்குவரத்து நெரிசலில் சிக்குகின்ற சூழல் இருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்காக. . .*